# பெரியாழ்வார் திருமொழி 3-1
## தன்னேராயிரம்

(யசோதைப் பிராட்டி கண்ணனது அதிமானுஷ சேஷ்டிதங்களைக் கண்டு முலைகொடுக்க அஞ்சுதல்)

223 * தன்னேராயிரம் பிள்ளைகளோடு * தளர்நடை இட்டு வருவான் *
பொன்னேய் நெய்யொடு பாலமுதுண்டு * ஒருபுள்ளுவன் பொய்யே தவழும் **
மின்னேர் நுண்ணிடை வஞ்ச மகள் கொங்கை துஞ்ச * வாய் வைத்த பிரானே *
அன்னே உன்னை அறிந்து கொண்டேன் * உனக்கு அஞ்சுவன் அம்மம் தரவே (1)

224 பொன்போல் மஞ்சனமாட்டி அமுதூட்டிப் போனேன் * வருமளவு இப்பால் *
வன்பாரச் சகடம் இறச் சாடி * வடக்கிலகம் புக்கிருந்து **
மின்போல் நுண்ணிடையாள் ஒருகன்னியை * வேற்றுருவம் செய்து வைத்த *
அன்பா உன்னை அறிந்து கொண்டேன் * உனக்கு அஞ்சுவன் அம்மம் தரவே (2)

225 கும்மாயத்தொடு வெண்ணெய் விழுங்கிக் * குடத் தயிர் சாய்த்துப் பருகி *
பொய்ம்மாய மருதான அசுரரைப் * பொன்றுவித்து இன்று நீ வந்தாய் **
இம்மாயம் வல்ல பிள்ளை நம்பீ * உன்னை என் மகனே என்பர் நின்றார் *
அம்மா உன்னை அறிந்து கொண்டேன் * உனக்கு அஞ்சுவன் அம்மம் தரவே (3)

226 மையார் கண்ட மடவாய்ச்சியர் மக்களை * மையன்மை செய்து அவர் பின் போய் *
கொய்யார் பூந்துகில் பற்றித் தனி நின்று * குற்றம் பலபல செய்தாய் **
பொய்யா உன்னைப் புறம் பல பேசுவ * புத்தகத்துக்குள கேட்டேன் *
ஐயா உன்னை அறிந்து கொண்டேன் * உனக்கு அஞ்சுவன் அம்மம் தரவே (4)

227 முப்போதும் கடைந்தீண்டிய வெண்ணெயினோடு * தயிரும் விழுங்கி *
கப்பாலாயர்கள் காவிற் கொணர்ந்த * கலத்தொடு சாய்த்துப் பருகி **
மெய்ப்பாலுண்டழு பிள்ளைகள் போல * நீ விம்மி விம்மி அழுகின்ற *
அப்பா உன்னை அறிந்து கொண்டேன் * உனக்கு அஞ்சுவன் அம்மம் தரவே (5)

228 கரும்பார் நீள்வயல் காய்கதிர்ச் செந்நெலைக் * கற்றா நிறை மண்டித் தின்ன *
விரும்பாக் கன்றொன்று கொண்டு * விளங்கனி வீழ எறிந்த பிரானே **
சுரும்பார் மென்குழல் கன்னி ஒருத்திக்குச் * சூழ்வலை வைத்துத் திரியும் *
அரம்பா உன்னை அறிந்து கொண்டேன் * உனக்கு அஞ்சுவன் அம்மம் தரவே (6)

229 மருட்டார் மென்குழல் கொண்டு பொழில் புக்கு * வாய் வைத்து அவ்வாயர் தம்பாடி *
சுருட்டார் மென்குழல் கன்னியர் வந்து உன்னைச் * சுற்றும் தொழ நின்ற சோதி **
பொருட்டாயமிலேன் எம்பெருமான் * உன்னைப் பெற்ற குற்றமல்லால் * மற்றிங்கு
அரட்டா உன்னை அறிந்து கொண்டேன் * உனக்கு அஞ்சுவன் அம்மம் தரவே (7)

230 வாளாவாகிலும் காணகில்லார் * பிறர் மக்களை மையன்மை செய்து *
தோளாலிட்டு அவரோடு திளைத்து * நீ சொல்லப்படாதன செய்தாய் **
கேளார் ஆயர் குலத்தவர் இப்பழி * கெட்டேன் வாழ்வில்லை * நந்தன்
காளாய் உன்னை அறிந்து கொண்டேன் * உனக்கு அஞ்சுவன் அம்மம் தரவே (8)

231 தாய்மார் மோர்விற்கப் போவர் * தமப்பன்மார் கற்றா நிறைப் பின்பு போவர் *
நீ ஆய்ப்பாடி இளங்கன்னிமார்களை * நேர் படவே கொண்டு

போதி **
காய்வார்க்கு என்றும் உகப்பனவே செய்து * கண்டார் கழறத்
திரியும் *
ஆயா உன்னை அறிந்து கொண்டேன் * உனக்கு அஞ்சுவன்
அம்மம் தரவே (9)

232 தொத்தார் பூங்குழல் கன்னி ஒருத்தியைச் * சோலைத் தடம்
கொண்டு புக்கு *
முத்தார் கொங்கை புணர்ந்து இராநாழிகை * மூவேழு சென்ற
பின் வந்தாய் **
ஒத்தார்க்கு ஒத்தன பேசுவர் * உன்னை உரப்பவே நான் ஒன்றும்
மாட்டேன் *
அத்தா உன்னை அறிந்து கொண்டேன் * உனக்கு அஞ்சுவன்
அம்மம் தரவே (10)

233 * காரார்மேனி நிறத்தெம்பிரானைக் * கடிகமழ் பூங்குழல் ஆய்ச்சி *
ஆரா இன்னமுதுண்ணத் தருவன் நான் * அம்மம் தாரேன் என்ற
மாற்றம் **
பாரார் தொல்புகழான் புதுவை மன்னன் * பட்டர் பிரான் சொன்ன
பாடல் *
ஏரார் இன்னிசை மாலை வல்லார் * இருடீகேசன் அடியாரே (11)